# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2422 - 2025 ජනවාරි මස 31 වැනි සිකුරාදා - 2025.01.31

2422 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (II ஆ) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 102 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| - | |
| உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள் | 104 |
| அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கே.ஜீ. பிரதீப் புஷ்ப குமார,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

101 - B 82650 - 403 (2025/01)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**விவசாயம், நீர்ப்பாசனம் , நிலங்கள் மற்றும் கால்நடை அமைச்சு**
**நில அளவைத் திணைக்களம்**

**கேள்விமனு அறிவித்தல்**

பிராந்திய ஆய்வு அலுவலகங்களுக்கான கட்டிடங்களின் வாடகை- 2025

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களிற்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2025.02.14 ஆந் திகதி பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| *மாகாணம்* | *மாவட்டம்* | *பிரதேச நில அளவை அலுவலகம்* | *கேள்விமனு ஒப்படைத்தல்* | *அருகில் உள்ள நகரம்* | *தேவைப்படும் திகதி* |
|---|---|---|---|---|---|
| வடமத்திய மாகாணம் | அநுராதபுரம் | அநுராதபுரம் -2 | மாகாண சர்வேயர் ஜெனரல் (வடமத்திய மாகாணம்). மாகாண சர்வேயர் ஜெனரல் அலுவலகம். அநுராதபுரம். | அநுராதபுரத்தைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2025.03.01 |
| மேல் மாகாணம் | களுத்துறை | ஹொரணை | மாகாண சர்வேயர் ஜெனரல் மேல் மாகாணம்). மாகாண சர்வேயர் ஜெனரல் அலுவலகம். கொழும்பு-05 | ஹொரணையைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2025.03.17 |
| மேல் மாகாணம் | களுத்துறை | பலாவத்த | மாகாண சர்வேயர் ஜெனரல் மேல் மாகாணம்). மாகாண சர்வேயர் ஜெனரல் அலுவலகம். கொழும்பு-05 | பெலவத்தையைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2025.03.21 |
| மேல் மாகாணம் | கம்பஹா | மஹார | மாகாண சர்வேயர் ஜெனரல் மேல் மாகாணம்). மாகாண சர்வேயர் ஜெனரல் அலுவலகம். கொழும்பு-05 | வெலிவேரிய மற்றும் தெல்கொடவைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2025.05.01 |
| கிழக்கு மாகாணம் | அம்பாறை | அக்கரைப்பத்து | மாகாண சர்வேயர் ஜெனரல் (கிழக்கு மாகாணம்). மாகாண சர்வேயர் ஜெனரல் அலுவலகம். திருகோணமலை | அக்கரைப்பற்றைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2025.04.01 |
| கிழக்கு மாகாணம் | அம்பாறை | சம்மாந்துறை | மாகாண சர்வேயர் ஜெனரல் (கிழக்கு மாகாணம்). மாகாண சர்வேயர் ஜெனரல் அலுவலகம். திருகோணமலை | சம்மாந்துறையைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2025.04.01 |

**பூரணப்படுத்தப்படவேண்டிய பொதுவான தேவைப்பாடுகள்;**

அனைத்து கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருந்தல் வேண்டும். தண்ணீர் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்புஇருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொறுத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு

அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவிற்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்கு செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தது மூன்று வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் மற்றும் வாகன தரிப்பிட வசதிகள் இருக்க வேண்டும். எல்லைக் கல் தயாரிப்பதற்கான இட வசதி இருப்பதோடு ஆகக் குறைந்தது பத்து அலுவலர்கள் இருக்கக்கூடிய அறை அல்லது இட வசதிகள் இருக்க வேண்டும். கட்டிடத்தின் பரப்பளவு குறைந்தது 2500 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையில் இடது பக்க மேல் மூலையில் "பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்கு பெறுதல் ( இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2025.02.14 ஆந் திகதியன்று 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்துக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

வை.ஜீ. ஞானதிலக்க,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம்,
கிருல வீதி, கொழும்பு -05.
2025.01.24.

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் - 2025**

**விலைமனுக்கோரல் விண்ணப்பப்படிவம் - 2025**

**கட்டிட உரிமையாளருக்காக:**

01. முழுப் பெயர்: ................
02. முகவரி: ................
03. தொலைபேசி இலக்கம்: ................
04. தேசிய அடையாள அட்டை இலக்கம்: ................

**கட்டிடம் தொடர்பாக :**

01. எந்தப் பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது? ................
02. மாதாந்த வாடகைத் தொகை?
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி:
04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி.மீ: ................
05. இடத்தின் விஸ்தீரணம்: ................
06. கட்டிடத்தின் விஸ்தீரணம் வர்க்க அடியளவு அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள்: ................
07. தனியாக அவதானிக்கக் கூடிய நீர்மானி பொறுத்தப்பட்டுள்ளதா?: ...............
08. தனியாக அவதானிக்கக் கூடிய மின்மானி பொறுத்தப்பட்டுள்ளதா?: ................
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் ( மதில்/ கம்பி/ வேலி): ................
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை: ................
11. கம்பித் தொலைபேசி தொடர்பு உள்ளதா?: ................

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல் தவறானது எனத் தெரிய வரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலை மனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகின்றேன்.

.....................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

01- 765

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் விதிகளின் பிரகாரம் இத்தால் விடுக்கப்படும் பகிரங்க அறிவித்தலானது, துல்ஹிரிய, குருநாகல் வீதி, MAS பெப்ரிக் பார்க் ( தபால் குறியீடு : 71610) இல் பதிவு முகவரி உடைய டெக்சோ ( பிரைவட்) லிமிட்டட் ( கம்பனி இல. பிவி 2614) இன் வெளியிடப்பட்ட மூலதனம் இலங்கை ரூபா எட்டு பில்லியன் தொளாயிரத்து அறுபத்தி இரண்டு மில்லியன் முப்பத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தி ஆறு( LKR8,962,037,976.00) இல் இருந்து இலங்கை ரூபா ஐந்து பில்லியன் நூற்றி இருபத்தி எட்டு மில்லியன் எழுபத்தி எட்டாயிரத்து தொள்ளாயிரத்து எண்பது (LKR 5,128,078, 980.00) வரை குறைக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோப்பரேட் சேர்விஸ் ( பிரைவட்) லிமிட்டட் ,
செயலாளர்,
டெக்சோ ( பிரைவட்) லிமிட்டட்.

01- 752

---

## குறுகியகால ஒன்றிணைப்புக்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 242 ஆம் பிரிவுக்கு அமைய PB 856 ஆம் இலக்கம் கொண்ட இல. 20-24 மோதர வில இன்டஸ்ரியல் எஸ்டேட், பாணந்துறை முகவரியில் பதிவு பெற்ற டயமன்ட் கட்டர்ஸ் லிமிடெட் மற்றும் PV93694 ஆம் இலக்கம் கொண்ட இல. 25, மோதர வில இன்டஸ்ரியல் எஸ்டேட் , பாணந்துறை முகவரியில் பதிவு பெற்ற நிரூ லங்கா எக்ஸ்போர்ட்ஸ் ( தனியார்) கம்பனியுடன் ஒன்றிணைப்பது எனும் முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

டயமன்ட் கட்டர்ஸ் லிமிடெட் மற்றும் நிரூ லங்கா எக்ஸ்போர்ட்ஸ் ( தனியார்) கம்பனி ஒன்றிணைவது 2025.03.10 ஆந் திகதி அல்லது கம்பனிப் பதிவாளர் நாயகத்தால் ஒன்றிணைப்பு சான்றிதழ் வழங்கப்படும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும். இரண்டு கம்பனிகளின் பணிப்பாளர் சபையினரின் முடிவாவது இந்த ஒன்றிணைப்பு இரு கம்பனிகளின் நன்மை கருதியதாகும். ஒன்றிணைப்பு நடைமுறைக்கு வந்தவுடன் மூலதன நிதி உறுதித்தன்மை பரீட்சிக்கப்பட்டு தேர்ச்சி பெறுவோம் என பணிப்பாளர் சபையினர் நம்புகின்றனர்.

கம்பனியின் எந்தவொரு பங்குதாரரும் அல்லது கடன் கொடுநரும் ஒன்றிணைப்பு முன்மொழிவு திட்டங்களை பரீட்சிக்கும் உரிமை கொண்டுள்ளார். அவ்வாறான பங்குதாரர் கடன் கொடுநர்அல்லது ஒன்றிணையும் கம்பனியின் உரித்து கொண்டுள்ள நபர் ஒன்றிணைப்பு யோசனை தொடர்பான ஆவணப்பிரதிகளை இல. 130, 2 ஆம் மாடி. நாவல வீதி, நாரஹேன்பிட்ட, கொழும்பு -05 எனும் முகவரியிலுள்ள கம்பனி செயலாளர்களான நெக்ஸியா கோப்பரேட் கன்சல்டன்ஸ் பிரைவட் லிமிடெட் நிறுவனத்திலிருந்து கோரல் ஒன்றின் மூலம் எந்தவொரு வேலை நாளிலும் காலை 8.30 தொடக்கம் மாலை 4.30 வரை கொடுப்பனவு இன்றி பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

நெக்ஸியா கோப்பரேட் கன்சல்டன்ஸ்
பிரைவட் லிமிடெட் ,
கம்பனி செயலாளர்,
டயமன்ட் கட்டர்ஸ் லிமிடட் மற்றும் நிரூ லங்கா
எக்ஸ்போர்ட்ஸ் ( தனியார்) கம்பனி.

01- 762

## ஏ ஜே ஆர் ஜே ஹோல்டிங்ஸ் ( பிறைவட்) லிமிடட் (பிவி 130944)

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

ஏ ஜே ஆர் ஜே ஹோல்டிங்ஸ் ( பிறைவட்) லிமிடட் ( நிறுவனம்) தனது கூறப்பட்ட மூலதனத்தை ரூபாய் ஒரு பில்லியன் அறுநூற்று எழுபத்து மூன்று மில்லியன் நூற்று நாற்பத்து நான்கு ஆயிரத்தில் (ரூ. 1,673,144,000.00) இருந்து ரூபாய் ஒரு பில்லியன் (ரூ. 1,000,000,000.00) ஆக குறைக்க எத்தணிப்பதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது. இது நிறுவனத்தின் கூறப்பட்ட மூலதன கணக்கை ரூபாய் அறுநூற்று எழுபத்து மூன்று மில்லியன் நூற்று நாற்பத்து நான்கு ஆயிரத்தால் (ரூ.673,144,000.00) குறைத்து அத்தொகையை பங்குதாராருக்கு மீள செலுத்துவதன் மூலம் நிறைவேற்றப்படும். இதன் மூலம் நிறுவனத்தின் பங்குகள் 167,314,400 இல் இருந்து 100,000,000 ஆகக் குறைக்கப்படும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

2025, சனவரி 24.

01- 753